19 JUN 2000




# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

... வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 02 வெள்ளிக்கிழமை (16 06 2000) VALAMPURI ஒலி: 179


★ தென்மராட்சி மோதலை அடுத்து

# 800 குடும்பங்களுக்கு மேல் வன்னிக்கு வந்துள்ளனர்!

## கிளி, முல்லை, அரசஅதிபர்கள் அத்தியாவசிய சேவை ஆணையாளரிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களினால் அப்பகுதியில் இருந்து சுமார் எண்ணூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வன்னிப் பகுதிக்கு வந்துள்ளதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு அரசாங்க அதிபர்கள் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் சரத் முனசிங்காவிடம் அறிவித்துள்ளார்கள்.

தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்றுவரும் மோதல்களை அடுத்து அப்பகுதியில் இருந்து கிளிநொச்சி மாவட்டத்திற்கு அறுநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து வந்துள்ளதாகவும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 200 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வந்துள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரி. ஐயாத்துரையும், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் எஸ், சுந்தரமும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் சரத்முனசிங்காவுக்கு அறிவித்துள்ளார்கள்.

இடம்பெயர்ந்து வந்துள்ள இந்தமக்களுக்கு நிவாரண

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் தலைவரானார்

யாழ். மாவட்ட விவசாய உற்பத்திக் கூட்டுறவு சங்க சமாசத்தின் தலைவராக இரண்டாவது தடவையாக சிறீவி.கே. சிவஞானமும் உபதலைவராக எஸ். குமாரவேலும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (வ)

## பிரதித் தளபதி லயனல் பலகல்ல

இலங்கை இராணுவத்தின் பிரதித் தளபதியாக மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ், பிரதேச செயலர் பிரிவில் அமுல் படுத்தப்பட்டிருக்கும் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 7.00 மணியிலிருந்து பிற்பகல் 4.00 மணி வரை தளர்த்தப்பட்டிருக்கும்.

யாழ். பிரதேச செயலர் பிரிவு தவிர்ந்த யாழ் குடா நாட்டின் தீவுப்பகுதி உட்பட ஏனைய பகுதிகளில் இன்று அதிகாலை 5 மணிக்கு ஊரடங்கு தளர்த்தப்பட்டுமீண்டும் இன்று இரவு ஏழு மணிக்கு அமுல் படுத்தப்படும் என்று யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத்தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. [க-வ]

## செய்மதி மூலம் தொலைத் தொடர்பு இரு வாரங்களில் கிடைக்கும்

### நுண் அலைத் தொடர்பிற்கும் முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கும் வெளியிடங்களுக்குமான தொலைத் தொடர்பினை ''செய்மதி மூலம்'' ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ரெலிக்கொம்நிறுவனம் எடுத்து வருவதாகவும் இது இரு வாரங்களில் சீராகும் என்றும் அதிகாரி ஒருவர் நேற்று வலம்புரிக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; யாழ்ப்பாணத்திற்கும் வெளியிடங்களுக்கும் செய்மதி மூலமான தொடர்பினை ஏற்ப

(4ஆம் பக்கம் பார்க்க)

## வைகாசி மாத கொடுப்பனவுகள்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் காசநோய், தொழுநோய், புற்றுநோய் என்பவற்றிற்கான உதவிப்பணம் பெறுபவர்களது வைகாசி மாதத்திற்கான கொடுப்பனவுகள் தபாலகங்களுக்கு அனுப்பி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வத்தளைக் குண்டு வெடிப்புச் சம்பவம் சிங்கள இனத்தவர் என சந்தேகம்?

வத்தளைப் பகுதிக் குண்டு வெடிப்பை மேற்கொண்டவர் சிங்கள இனத்தவர் என்று விசாரணைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு வடக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ் மாஅதிபர் தயா ஜெயசுந்தரா தெரிவித்துள்ளார்.

குண்டு வெடிப்பினை மேற்கொண்டவர் கொறல்லவல்லப் பகுதியில் வசிக்கும் தச்சுத் தொழிலாளி என்றும் இவர் பணத்திற்காகக் குண்டினை எடுத்துச் செல்வதற்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பகிர்வு தொடர்பாக ஆராய விசேட குழு நியமனம்!

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு விடயம் குறித்து அரசினால் முன்வைக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு தொடர்பாக ஆராய்வதற்கு விசேட குழுஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

15 பேர் கொண்ட இக்குழுவில் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட ஐ. தே. கட்சி பிரமுகர்கள், பொதுசன ஐக்கிய முன்னணி எம். பிக்கள் பலரும் உள்ளடங்குவர்.

இக் குழுவின் கூட்டம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தலைமையில் அண்மையில் அலரி மாளிகையில் இடம்பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## தென்மராட்சி வலய மாணவர்களுக்கு கல்விப் பணிப்பாளரின் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

2000ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் க. பொ. த. உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் ஐந்து புலமைப் பரீட்சை ஆகியவற்றுக்குத் தோற்றவுள்ள தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் வலிகாமம் கல்வி வலயத்தில் (இராமநாதன் கல்லூரி) அல்லது நெல்லியடி ம.ம.வித்தியாலயத்தில் எதிர்வரும் 19ந் திகதி திங்கட்கிழமை, காலை 10 மணி தொடக்கம் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி. செல்வராசா கேட்டுள்ளார்.

புலமைப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்பில உயிரிழந்தோர்

தொடரும்ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையின் போதும், வெவ்வேறு சம்பவங்களின்போதும் உயிரிழந்த தமது உறுப்பினர்களின் பெயர் விபரங்களை புலிகள் அறிவித்துள்ளனர், அவர்களின் விபரம் வருமாறு:

★ கலைப்பிரியா (யோகேஸ்வரன் நிர்மலா) முல்லைத்தீவு

★ காந்தன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். விவசாயிகளுக்கு இதுவரை ஒரு லீற். ம.எண்ணைகூட வழங்கவில்லை

யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளுக்கு 4 லீற்றர் மண்ணெண்ணை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டபோதும் இதுவரை ஒரு லீற்றர் மண்ணெண்ணை கூட வழங்கப்படவில்லை என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக உடுவில் கமநலசேவை நிலையத்தலைவர் எஸ். இலகுநாதன் தெரிவிக்கையில்:

உடுவில் கமநல சேவை நிலையப்பகுதி விவசாயிகள் இன்று வரை தம்முடைய

[4 ஆம் பக்கம் பார்க்க]

✶ இலங்கைத் தமிழ் அகதிகள்

## எப்பகுதி கடற் பிராந்தியத்தில் தத்தளிப்பினும் மீட்க வகைசெய்யவும்

### வாஜ்பாய்க்கு கருணாநிதி கடிதம்

(சென்னை)

தலைமன்னாரிலிருந்து தமிழகம் சென்ற தமிழ் அகதிகள் இலங்கைக் கடற் பிராந்தியத்தில் உள்ள மணல் திட்டில் நிற்பதால் அவர்களை இலங்கைக் கடற்படைதான் மீட்க வேண்டும் என்று இராமேஸ்வரம் காவற்படை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்பிராந்தியத்தில் நேற்று முன்தினம் மணல் திட்டில் இறக்கி விடப்பட்ட 28 அகதிகளில் ஐவர் நீந்திக்கொண்டிருந்த போது மீட்கப்பட்டு இராமேஸ்வரம் கொண்டு செல்லப்பட்டதாகவும் ஏனைய 23 அகதிகளும் கடல் நடுவில் இலங்கைக் கடற்பரப்பில் தத்தளிப்பதாகவும் அவர்களைத் தங்களால் மீட்க முடியாது என்றும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை இவ்வாறு

[4ஆம் பக்கம்பார்க்க]

## ஏழாலைப் பகுதி குப்பைக் கிடங்கில் ஆண் சிசு ஒன்று கண்டுபிடிப்பு!

(யாழ்ப்பாணம்)

குப்பைக் கிடங்கொன்றில் ஆண் சிசு ஒன்று கண்டு எடுக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஏழாலைப் பகுதியில் உள்ள குப்பைக் கிடங்கொன்றில் அனாதரவாகக் கிடக்கக் காணப்பட்ட இந்த ஆண்சிசுவை ஏழாலை வடக்கு கிராமசேவகர் எஸ். சுதாகரன் தெல்லிப்பழை

(4ஆம் பக்கம் பார்க்க)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### பௌதிகவியல் (A/L) 2001 / 2002

பௌதிகவியல் இணைந்த கணித வகுப்புகள் மீண்டும் நடைபெறுகின்றன. ஏராளமான பயிற்சிகளோடு குறுகிய காலத்தில் முழுப்பாடத் திட்டமும் அனுபவமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியரினால் தனிப்பட்ட முறையிலும் சிறப்பாகக் கற்பிக்கப்படும். தொடர்பு பிற்பகல் தினசரி 2 மணிக்குப் பின்:

R. பாலசுப்பிரமணியம்
B.Sc [Cey] Dip-In-Ed.
[1032]

### பொய்யா மொழி ஜோதிடம்

மீண்டும் செவ்வாய் சனிக்கிழமைகளில் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவிலடி நல்லூரிலும் ஏனைய நாட்களில் மல்லாகம் பழம் பிள்ளையார் கோவில் மடத்திலும் நடைபெறும். (898)

### தகவல் தரவும்

7-6-2000 முதல் எட்டு மாத சினைப்பசு, மைவிலை நிறம், மாறு கொம்பன், PA குறிசுடப்பட்டது காணாமற் போய்விட்டது. தகவல் தரவும். 166, கந்தப்பசேகரம்வீதி அரன் தியேட்டர் அருகாமை, யாழ்ப்பாணம். [1042]

### தவறிவிட்டது

தங்கராசா றொபின்சன் விசேட அடையாள அட்டை இலக்கம் - 0905019983 மானிப்பாய்க்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 3-ம் கட்டை, ஆனைக்கோட்டை என்ற விலாசத்தில் தயவுசெய்து ஒப்படைக்கவும். (1025)

### தவறிவிட்டது

லிங்கரெட்ணம் கஜேந்திரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல 772803516v) விசேட அடையாள அட்டை (இல 09020 23832) என்பன மானிப்பாய்க்கும் நாச்சிமார் கோவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 18/1 சட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (1028)

### இன்று பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

நாட்டிற்கு சாந்தியும், சமாதானமும் வேண்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ், பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவாச்சிரமத்தில் பிரார்த்தனை இடம்பெறும். (க)

### இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட ஒதல்லோ தொலைக் காட்சி நாடகம் இன்று காலை இணுவில் லஷ்மி தியேட்டரில் திரையிடப்படவுள்ளது. (சி)

### முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றம் நடாத்திவரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் பன்னிருதிருமுறைப் பாராயணம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ்ப்பாணம் நீராவியடி கடையிற் சுவாமி ஆலயத்தில் இடம்பெற உள்ளதாக மேற்படி அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (க)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் மனையியல் ஆசிரியை திருமதி லலிதா பத்மராசா அவர்களின் ஏக புத்திரன் செல்வன் ப. சஜிந்தன் மே - 21 அன்று இறைபதமடைந்த செய்தி அறிந்து துயருறுகிறோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆசிரியர் கழகம்-
யா/அச்சுவேலி மகாவித்தியாலயம்,
அச்சுவேலி.
(502)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் சோமசுந்தரக்குருக்கள் கோபாலகுமார் (எமது உயர்தர வகுப்பு மாணவ மன்ற பொருளாளர், மாணவத் தலைவர்) அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம.

யா / சந்திரபுர ஸ்கந்தவரோதய
மகாவித்தியாலய உயர்தர
வகுப்பு மாணவர்கள்.
[1022]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### திரு. ச. திருநாவுக்கரசு

(அதிபர், யா/நல்லூர் ஸ்தான சி. சி. த. க. வித்தி)

மறைந்த அதிபர் திரு. ச. திருநாவுக்கரசு அவர்களை இன்றையதினம் நினைவுகூரும் அதேவேளை இன்றையதினம் அன்னாரது குடும்பத்தாரின் துயரில் பங்குகொள்ளுவதுடன் இவரது ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி

அதிபர்சங்கம்,
நல்லூர்க் கோட்டம்.
(994)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி மோ. சிவரஞ்சினியின்
அன்புத்தாயார்

### மோகனராஜா சிவயோகம்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

15-ம் அணி மாணவர்கள்
மருத்துவ பீடம்.
(1021)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### பரமேஸ்வரி - செல்லத்துரை

தோற்றம்:- 23 03-1944 மறைவு:- 28-06-1999

திதி:- பூரணை 16 - 06 -2000

அன்பின் திருவுருவாய் அணையா ஒளிவிளக்காய் விஞ்சும் பெருநிலவாய் வழிகாட்டிய - தெய்வமே ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது எம் துயர் நீண்டிடும் எம் வாழ்வில் நிறைவினைத் தந்திடும் உங்கள் ஆத்மா சாந்திபெற தென்கோவை வீரபத்திரரை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுடன்,
குடும்பத்தினர்.

"தாயகம்"
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
(1002)

## பிரத்தியேக வகுப்பு

### COMBINED MATHS

ஆசிரியர்: திரு. சு. இலட்சுமணன்

மீண்டும் ஆரம்பம்

16-06-2000 வெள்ளிக்கிழமை

G. C. E. (A/L) 2001 - நேரம் பி.ப. 2.00 மணி

17 - 06 -2000 சனிக்கிழமை

G. C. E. (A/L) 2002 - நேரம் மு. ப. 7.00 மணி

G. C. E. (A/L) 2000 மீட்டல் வகுப்பு
20 - 06 - 2000 பி. ப. 2.00 மணி

410, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(986)

## மரண அறிவித்தல்கள்

### சிவானந்தம் சாந்தினி

கிளான்துன்னாலை தெற்கு, கரவெட்டியைப்பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவானந்தம் சாந்தினி 12. 06. 2000 அன்று கனடாவில் காலமாகிவிட்டார்.

இவர் இரத்தினசிங்கம் தேவகி தம்பதிகளின் ஏக புத்திரியும் சண்முகதாஷ் (யாழ். பல்கலைக்கழகம் கலைப்பீடம் 3 ம் வருடம், மோகனதாஷ் யா/விக்கினேஸ்வராகல்லூரி கரவெட்டி) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
இ. சண்முகதாஷ்
(சகோதரன்)
(1039)

### திருமதி பரமேஸ்வரி பாலசுப்பிரமணியம்

காரைநாகர் களபூமியையைப் பிறப்பிடமாகவும், 236/4 இராமையாச் செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி பாலசுப்பிரமணியம் 15 - 06 - 2000 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (A.S. சங்கரப்பிள்ளைநிறுவனம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புமனைவியும், காலஞ்சென்ற C.S. கனகரத்தினம், சரஸ்வதி தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்ற கந்தையா - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்புமருமகளும், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற சிவஞானசுந்தரம், புவனேஸ்வரி, சிவபாதசுந்தரம், சரோஜினிதேவி, காலஞ்சென்ற திலகவதி, கனகசுந்தரம் ஆகியோரின் அன்புச்சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15 - 06 - 2000 வியாழக்கிழமை அன்று, இல 72/23 பணிக்கர் வளவு திருநெல்வேலியில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்
க. சிவபாதசுந்தரம்
(தம்பி)

72/23 பலாலி வீதி
பணிக்கர் வளவு,
திருநெல்வேலி.
(1043)

அமரர்

### வேலாயுதபிள்ளை ஜெயவீரசிங்கம்

(சங்கீத பூஷணம்/இளைப்பாறிய ஆசிரியர்)

நீர்வேலியை சொந்த இடமாகவும் ... தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை ஜெயவீரசிங்கம் 16-5-2000 ... காலமானார்.

இவர் வேலாயுதபிள்ளை அன்னம்மாவின் மகனும் (திருநெல்வேலி) மகேஸ்வரியின் அன்புக் கணவனும் ரவிச்சந்திரன் (M.S.F) ... றனிதா (இசைத்துறை, யாழ். நுண்கலை பீடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், துரைசிங்கம் (மருந்துக்கலவையாளர், கோண்டாவில்) தனபாலசிங்கம் (சாரதி CTB கோண்டாவில்) மகேந்திரசிங்கம் (ஆசிரியர் நவீலட் பாடசாலை, கைதடி) ஆகியோரின் சகோதரரும், சுதா, ராஜ்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் வைதேகியின் பேரனுமாவார்.

அமரரின் இறுதிச் சடங்குகள் 17 5-20 0 மல்லாகியில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

V. துரைசிங்கம்
நந்தாவில் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்
மகேஸ்வரி (மனைவி)
றனிதா (மகள்)
[1040]

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு.

- குறள்

# வலம்புரி

## மலையை யக் கல்லி எலியைப் பிடித்த

நாடு நாடி நிற்கின்ற சமாதானம் மலைக்கல்லி எலியைப் பிடித்த மாதிரி போய் விடக்கூடாது. முகலும் கடைசியுமாய் மண்ணில் உரிமைப் பயிருக்கு அத்திவாரமிட்டாக வேண்டும். உயிராகுதிகள் ஏராளம் கொடுத்தாகி விட்டது. உலக நாடுகள் நாட்டின் பிரச்சினையை உள்வாங்கிக்கொண்டன. நீறு பூத்த நெருப்பென கனன்று கொண்டு இருக்கும் இனப்பிரச்சினையால் மூண்ட கொடியயுத்தம் நிறுத்தப்பட வேண்டும். சமரச நிலையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும்.

இழப்பால் இந்த மண்ணிலே மூண்ட நெஞ்சுக் கனல் காட்டுத் தீபோல் சுவாலித் தெரிகிறது. அது தணிய வேண்டும். கண்ணகி எரியூட்டிய மதுரையாக மாறி விடக்கூடாது.

நோர்வேயும் இந்தியாவும் முனைந்து நின்று சமாதானத்தை நிலைநாட்ட வேண்டும். நீதிக் கரங்களை நெகிழ விடாது பார்த்துக் கொள்ளவேண்டும். வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் வந்துபோனதும் சமாதானத்துக்கான அறிகுறி தென்படும் என ஏங்கிய மக்கள் ஏராளம்.

மீண்டும் மீண்டும் இழுத்தடிப்புகள் நிகழாவண்ணம் உரியதை கொடுத்து சமாதானத்திற்கு உயிர் கொடுக்க வேண்டும். கனவில் புலம்புவது போல் பழைய பல்லவிகள் பாடப்படக்கூடாது. அவை கேட்டுக் காதுகள் மரத்து விட்டன. காரியம் எதுவும் கடந்த காலங்களில் நடந்தேறாப் பல்லவிகள் வேண்டாதனவே.

விழித்துக் கொண்ட இனத்திற்கு உரிய விலையைக் கொடுத்தவர்க்கு கொடுக்க வேண்டியதைக் கொடுத்து நீண்ட நிலுவையை வெட்டிக்கொள்ள வேண்டும். அனுமன் கால் பதித்த தென்னிலங்கை [illegible] காரியங்கள் நடைபெற நீண்டு கொண்டு [illegible] போல் நிபதிப்ப என்று நெஞ்சம் பொருமுகிறது.

அன்பின் வழி அது உயிர் நிலை என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். பரஸ்பரம் அணைக்கும் கரங்கள் நீள வேண்டும். நாவொன்று பேச வஞ்சக நெஞ்சொன்று நாட என்றநிலை தேய்ந்து போகட்டும். திடமான சுக வாழ்வு மலர சமாதானம் விரைந்து வரட்டும்.

- அன்புடன் ஆசிரியர்

---

# எமது வாடிக்கையாளர் கவனத்திற்கு

181, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கிய

## வைற் ஹவுஸ் அந்திய கால சேவை
## (WHITE HOUSE FUNERAL SERVICE)

தற்காலிகமாக ஆனைக்கோட்டை சந்திக்கு முன்பாக காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 7 மணி வரையும் பழைய இடத்தில் காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையும் இயங்குகிறது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

நிர்வாகத்தினர்

(1012)

---

# இரண்டாவது பிறந்த நாள் வாழ்த்து

## செல்வன் ஸ்ரீ. மணிகண்டன்

**ஸ்ரீதரக்குருக்கள் ரேணுகா**

**தம்பதிகளின் ஏக புத்திரன் மணிகண்டன்**

தனது 2 வது பிறந்தநாளை மொராசியலில் உள்ள தனது இல்லத்தில் இன்று வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியம்மாமார், பெரியப்பாமார், ஆசைமாமா (சங்கர்) ஆசைச்சித்திமார்கள் [illegible], பிரியா, மற்றும் அக்காமார், அண்ணாமார், [illegible] சாயி ஆகியோர் எல்லாம் வல்ல [illegible] சித்தி விநாயகர், மங்களமாகாளி திருவருள் துணையோடு வாழ்த்துபவர் அம்மா தாத்தாகுடும்பத்தினர்.

S. இந்திரசாபதிக்குருக்கள்
கொக்குவில், கிழக்கு.

(940)

---

# சிபா மருத்துவ நிலையம்

551, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கிய நிலையம் மீண்டும் 18 06 - 2000 முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் காலை [illegible] மணி முதல் 3 மணி வரை இயங்கும் என்பதனை அறியத் தருகின்றோம்.

நிர்வாகத்தினர்.

தகவல்:- ஐ. சுந்தரேஸ்வரன்.
70/10, அரசடி வீதி.
யாழ்ப்பாணம்

---

# தேடுகின்றோம்

நுணாவில் மகதியைச் சேர்ந்த

**பாலச்சந்திரன் வெங்கேஸ்வரி குடும்பத்தினர். மு பூரணம்**

ஆகியோர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ்க்காணும் விலாசங்களுக்கு அறியத்தரவும்

மு. கதிரவேலு.
C/o திருமதி. க. வேலுர்மயிலும்.
(ஆசிரியர்)
பாலபவனம்,
அல்வாய் தெற்கு.
அல்வாய்.

வை. பஞ்சாட்சரம்
C/o, செல்வராஜா
சென்ஆன்ஸ்
தேவாலய வீதி,
மானிப்பாய்

(1029)

---

# இடமாற்றம்

## ராசி சில்க்ஸ் - நல்லி சில்க்ஸ்

**யாழ். நகரில் இயங்கிய ராசி சில்க்ஸ், நல்லி சில்க்ஸ**

தற்போது சங்கானை பஸ்நிலையம் அருகாமையில் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளருக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிப்பு:- சங்கானை பிரதேச செயலகம் முன்பாக

(1031)

---

# முக்கிய அறிவித்தல்

வலிகிழக்கு-வட பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 31 05 2000 க்கான கணக்காய்வு நடைபெறவுள்ளதால் எமது சங்கத்தின் கிராமிய வங்கியில் வைப்புச்செய்த அங்கத்தவர்கள் சங்கப்புத்தக மீதியுடன் தங்கள் புத்தகமீதியை சரிபார்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்
வலி. கிழக்கு, வடபகுதி ப. நோ. கூ. சங்கம்,
அச்சுவேலி.

(கி-450)

---

உ
சிவமயம்
ஆனைக்கோட்டை

# அருள்மிகு ஸ்ரீமுத்தநயினார் கோவில்
## மஹோற்சவ விஞ்ஞாபனம்
### விக்கிரம வருடம் 2000

| | |
|---|---|
| கொடியேற்றத் திருவிழா | 17-06-2000 சனிக்கிழமை முற்பகல் 10.30 மணி |
| சப்பறத் திருவிழா | 29-06-2000 வியாழன் பிற்பகல் 3.30 மணி |
| தேர்த்திருவிழா | 30-06-2000 வெள்ளி முற்பகல் 10 00 மணி |
| தீர்த்தத்திருவிழா | 1-07-2000 சனி காலை 8 30 மணி |
| கொடியிறக்கம் | 1-07-2000 சனி பிற்பகல் 3 00 மணி |
| திருக்கல்யாண உற்சவம் | 2-07-2000 ஞாயிறு பிற்பகல் 3 00 மணி |

இங்ஙனம்
தர்மகர்த்தாக்கள்

[1008]

---

# அவசர கூட்டம்

முகாமைத்துவ வணிகபீட 1ம் வருட மாணவர்களுக்கான கலந்துரையாடல் 19.6. 2000 அன்று 10 00 மணிக்கு நடைபெறும்.

1ம் வருட பிரதிநிதி
முகாமைத்துவ வணிகபீடம்.

(997)

---

சுகாதார சேவைத் திணைக்களத்தின்
பதவிகளின் பொருட்டு
பயிலுநர்களை

# ஆட்சேர்த்துக்கொள்ளும்போட்டிப்பரீட்சை 2000

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பத்தை உரிய தகுதிகளுடன் முடிவுத்திகதிக்கு முன்னர் அனுப்பியும் அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாதவர்கள் கீழ்க்காணும் ஆவணங்களுடன் எனது பணிமனையில் தொடர்பு கொள்ளவும்.

1) விண்ணப்பம் அனுப்பியதற்கான பற்றுச்சீட்டு
2) விண்ணப்பிப்பதற்கு தகுதியான தகைமைகளைக் கொண்ட சான்றிதழ்களின் மூலப்பிரதிகள்.

**இப்பரீட்சை யாழ் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் நடைபெறும்.**

விபரங்கள் யாழ். பல்கலைக்கழக பிரதான வாயிலில் வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பணிப்பாளர்.

(கி/507)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை
# கலைப்பீட வருடாந்தப் பரீட்சைகள்
# கல்வியாண்டு-1998-99

கலைப்பீடத்தின் பின்வரும் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் மாணவர்களிடமிருந்து 30-06-2000 திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. முதலாம் வருடத்தின் இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள்.
2. முதற்கலைத்தேர்வு (மீள பரீட்சை)
3. பொதுக்கலைத்தேர்வு பகுதி I, பகுதி-II
4. சிறப்புக்கலை பகுதி-I, பகுதி-II, பகுதி-III
5. ஆங்கிலம் (இரண்டாம் மொழி) மீள் பரீட்சைகள் (ESL LEVEL-1, 2, 3)

மீள் பரீட்சைகள் ஒரு பாடத்திற்கு ரூபா. 50% பல்கலைக்கழக காசாளரிடமோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி, தாம் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து கலைப்பீட அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் (கலைப்பீட அலுவலகத்தில் உரிய விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ளவும்.)

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.

(கி/505)

## தேனென வாழ்க்கை அமைந்திட வருவாய்

அன்னை நயினையே அருள் மழையே
உன்னை நம்பிடும் அடியவர் துயர்தீர
கண்ணைத் திறந்து காத்திட் ... க்கு
புண்ணிய வாழ்வு வழங்குவாய் ந ந்து
(நயினை தீ த்தம் இன்று)

த. சிவராஜா - நல்லூர்


### யாழ். விவசாயி ...

விவசாயத் தேவைக்குரிய மண்ணெண்ணையை பெற வில்லை. இது தொடர்பாக உரிய உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டும் பலன் ஏதும் கிடைக்கவில்லை.

இதனையடுத்து விவசாயிகள் கூடிய விலை கொடுத்து மண்ணெண்ணை வாங்கித் தமது தேவையைப் பூர்த்தி செய்கிறார்கள் என்று கூறினார். (வ)

### ஏழாலை...

வைத்தியசாலையில் ஒப்படைத்தாகவும் பின்னர் இந்த சிசு யாழ். போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-12)

### தென்மராட்சி...

மேற்படி நிலையங்களுக்கு வரமுடியாதிருப்பின் அவர்களின் பெற்றோர்கள் வருகை தர முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து வலிகாமம், வடமராட்சி ஆகிய இடங்களில் தங்கியுள்ள மாணவர்கள் உடுவில், தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய கல்விக் கோட்டங்களில் எதிர்வரும் 20ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் தமது பெயர் விபரங்களை சமர்ப்பிக்குமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ந)

### எண்ணூறு ...

உதவிகள வழங்கப்படவேண்டியதன் அவசியத்தை இரண்டு அரசாங்க அதிபர்களும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடம் வற்புறுத்துக் கூறியு ளனர்.

தென்மராட்சிப்பகுதி மக்கள் அப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு கடந்த மாதம்முதல் வந்துகொண்டிருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (வ)

### செய்மதி ...

டுத்தும் நடவடிக்கைகளை முனனின்று செய்வதற்கு கொழும்பில் இருந்து அதிகாரி ஒருவர் வந்துள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை நுண்அலைத் தொடர்புகளும் விரைவில் கிடைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள்இருப்பதாகவும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-12)

## தற்போதைய யாழ்ப்பாண சூழ்நிலையில் சபைக்கூட்டத்தை கூட்ட முடியாது

யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவும் சூழ்நிலையில் யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தைக்கூட்டுவது உசிதமான செயல் அல்ல என்று யாழ். மாநகர சபையின் பிரதி மேயர் ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் தற்போது அனுபவித்து வரும் துயரங்களை எண்ணிப் பார்க்க முடியாது அவர்கள் அவலம் நிறைந்த படுமோசமான நிலையில்உள்ளார்கள்.

இந்த நிலையிலும் நாம் யாழ்ப்பாணம் வருவதற்கு இராணுவத்திடம் அனுமதி கேட்டபோதுஅவர்கள் விமான மூலம் வருவதற்கு அனுமதி தர மறுத்துவிட்டார்கள் இதனை அடுத்து ஐ. சி. ஆர். சி யுடன் தொடர்பு கொண்டு அவர்கள் மூலமாக யாழ். வர முயற்சித்தோம் அம் முயற்சியும் கைகூடவில்லை.

இந்நிலையில் தமிழ்மக்கள் தற்போதைய இக்கட்டான நிலையில் அவர்களுக்குதேவையான சுகாதாரம் குடிநீர் போன்ற அத்தியாவசிய தேவைகளை நிவர்த்திசெய்வதற்கு முன்னுரிமை கொடுத்து செயற்படுமாறு மாநகரசபை ஆணையாளருக்கு கடித மூலம் கேட்டுள்ளோம் என்று பிரதிமேயர் ரவிராஜ் குறிப்பிட்டார். (வ)

### பிரதித் ...

நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தநியமனம் தொடர்பாக நேற்று முன் தினம் வெளியாகிய வர்த்த மானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ.ச)

### எப்பகுதி...

நடுக்கடலில் தத்தளிக்கும் தமிழர்கள் எக் கடற்பிராந்தியத்தில் நின்றாலும் அவர்களை இந்தியக் கடற்படை மீட்பதற்கு ஆவன செய்யும்படி இந்தியப் பிரதமர் வாஜ்பாயை தமிழக முதல்வர் மு. கருணாநிதி கடிதம் மூலம் கேட்டுள்ளார். (வ.க)

### புலிகள் தரப்பில் ...

(தம்பிராசா - சாள்ஸ்), கிளிநொச்சி.

★ சீர்மரறன் (செல்லையா - யோகேஸ்வரன்) யாழ்ப்பாணம்,

★ அன்பரசன் (சந்திரசேகம் - ஈஸ்வரன்) யாழ்ப்பாணம்

### வத்தளை ...

பயன்படுத்தப்பட்டுள்ளாரா என சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இக்குண்டுதாரியின்மனைவி நேற்றுக் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டார் என்றும் இது தொடர்பாக மேலும் 20 பேர் கைதுசெய்யப்பட்டுவிசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வ-4)

### வைகாசி ...

வைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று இவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் கேட்டுள்ளார். ]க - 120]


## தேடுகின்றோம்

3ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சட்டத்தரணி S. பரமராஜா என்பவரை சோமசுந்தரம் விக்கினேஸ்வரமூர்த்தி என்பவர் தேடுகிறார்.

தொடர்பு முகவரி:-
சிவகாமி அம்மன் கோவிலடி,
இணுவில் கிழக்கு.

(1044)



INSTITUTE OF INFORMATICS STUDIES

தலைமை அலுவலகத்தில்

## விரிவுரைகள் ஆரம்பம்

எமதுதலைமை அலுவலகத்தில் கணனி பயிற்சி நெறிகளினை மேற்கொண்டமாணவர்களுக்கான விரிவுரைகள் அனைத்தும்23/06/2000 (வெள்ளிக்கிழமை)முதல் வழமையான நேரஅட்டவணையின்படி தொடர்ந்தும் யாழ்ப்பாண தலைமை அலுவலகத்தில் நடைபெறும்.

★ இடம்பெயர்ந்துஇருக்கும் மாணவர்களுக்கு சங்கானை கிளை நிறுவனத்தில் விரிவுரைக இடம்பெற்று வருகின்றன.

★ NCCA[நவம்பர்2000] மாணவர்களுக்கான வகுப்புகளும் 23/6/2000(வெள்ளிக்கிழமை) அன்று ஆரம்பமாகும் என்பதனை அறியத்தருகின்றோம்.

இயக்குநர்
IIS யாழ்ப்பாணம்
(கி-509)



## லஷ்சுமி

இணுவில்
அஜித், சிம்ரான் நடித்த
உன்னைக்கொடு என்னைத்தருவேன்
(புதிய வெளியீடு)
10. 3,0 2. 30 [ப.நே]
(கி/506)



## IBMS
## Center for Computer Training

எமது நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகளுக்குமான கணனி வகுப்புக்கள் புதிய நேரசூசிகையின்படி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பமாக இருப்பதால் அனைவரும் சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

IBMS
701, K. K. S. Road,
JAFFNA.

Director (Ad)
(சி 510)


## நீங்கா நம் நினைவுகளில்
## அமரர். திரு.சபாபதி திருநாவுக்கரசு
அவர்களின்
## 31ஆம் நாள் நினைவஞ்சலி

நல்லூர் ஸ்தானவின்
நல்லதிபருக்கு,
நம்மனைவரினதும் சிரந்தாழ்ந்த
நல்லஞ்சலிகள் உரித்தாகுக!

எமக்கிது எதிர்பாரா அதிர்வு
ஏங்கியது இதயம்
எதிர் பாராமல் ஏதோ நிகழும் காலமிது
இதுதான் நம்வாழ்க்கை
எதிர்பாராமல் கேள்வியுற்றோம்
ஏக்கம் கொண்டோம்
எங்கிருந்தாலும் உங்கள் ஆசி
எமக்கெப்போதும் இருக்கும்.

சாதனா கண்ட சாதனையாளர்
கண்டது 27.11.1996 ல்
சாதனை பல புரிந்த பின்
சென்றதோ 17.05.2000 ல்
சாவு பல கண்ட இடப்பெயர்வு
உருக்குலைத்த எமது கல்விச்சாதனாலை
சரிவின்றி நிமிர்த்திய சத்தியவேந்தன்
சரிந்த போதும் அவர்தம்
சந்தன நினைவுகள் சரியா நம்மனங்களில்.

பேரென்ன தேடினாலும் புகழென்ன ஈட்டினாலும்
அதன் பின்னணி பள்ளியே என்றவர்
ஊர் மெச்சவாழினும் உலகு போற்ற இருப்பினும்
பள்ளிப் பணியே நம்கடமை என்றவர்
இன்றூர் காணும் இரண்டாவது இடப்பெயர்வில்
பேரோடும் புகழோடும்
ஊர் வாழ்த்தவும் உலகு போற்றவும்
சீர் கொண்டு சென்றார்
தம் கடமை நாளில்.

ஒரு நாளோடு எங்கள் உறவும்
உயர்கடனும் தீர்ந்திடாது
திரு நாளைப்போல என்றும்
வரும் நாளில் அவர் சீர்மை
உணர்ந்தெங்கள் இதயபீடம்
மலர்ந்து அறிவெனும் தீபம்
ஏற்றி அஞ்சலி செய்யும்
எமது உளம் நிறைந்த
அஞ்சலிப் பூக்களின் வாசத்தில்
உம் ஆத்மா சாந்தியடைவதாக.

என்றென்றும். அஞ்சலிக்கும்.
யா/ நல்லூர் ஸ்தான உப அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.

(974)


## Physics
## M. SPELLMEN
## A-L 2002

பொறியியல்
திங், புதன், வெள்ளி
6. 30 - 7. 30 (AM)
இடம்!- BEACON
(திருநெல்வேலி சந்தியில் இருந்து சிறிய தூரம்)
BEACON ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி)
பழைய மாணவர்கள் உடன் சந்திக்கவும்.
(1047)


## 31 ம் நாள் நெஞ்சகலா நினைவலைகள்
அமரர்
### சபாபதி திருநாவுக்கரசு
(அதிபர்)

நேமியில் 28.7.1940 நிமலனடியில் 17.5.2000
திதி 15.6.2000

திருவுடைத் திருவே எங்கள் திகழ் இல்லத்தலைவா நீங்கள்
தருவென வளர்ந்தகாலை மகிழ்வொடு மண்ணின் மீது
வருமுயர் சுற்றந்தாங்கி வளமொடு வாழ்ந்தோமையா
மருவிடும் வாழ்நாள் எல்லாம் மறந்திடமுடியா தென்றும்

16.6.2000 ல் நிகழவிருக்கும் வீட்டுக்கிருத்தியங்களிலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்பாகவேண்டும்.

மனைவி, மகள், மருமக்கள்,
சகோதர, சகோதரிகள்,
பெறாமக்கள்.

1/5 மடம் வீதி,
யாழ்ப்பாணம்.
தற்காலிக முகவரி
பழம்றோட்டு,
ஆறுகால் மடம், ஆனைக் கோட்டை.

(கி/508)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.